கங்கைகொண்ட சோழபுரம் விழா:

பிரதமர் மோடியை வரவேற்போம்!

ஜி.கே.வாசன் அறிக்கை!!

சென்னை, ஜூலை 26 :
சோழர்காலத்து பெருமையை போற்றும் விதமாக கங்கைகொண்ட சோழபுரத்திற்கு வருகை தரும் பாரதப் பிரதமர் நரேந்திர மோடியை வரவேற்று, சோழர் காலத்து வரலாற்றுப் புகழைப் பறைசாற்றுவோம் என தமிழ் மாநில காங்கிரஸ்(மூ) தலைவர் ஜி.கே. வாசன் எம்.பி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்துஅவர்வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சோழர்களின் புகழ்பெற்ற மன்னர்களுள் ஒருவரும் தஞ்சை பெரிய கோவிலை கட்டியவருமான ராஜராஜ சோழனின் மகனும், தென்னிந்தியாவின் புகழ்பெற்ற மன்னர்களுள் ஒருவருமானவர் ராஜேந்திர சோழன்.

ராஜேந்திர சோழன் காலத்தில் சோழர் மரபும், நிர்வாகமும், ராணுவமும் நிலைபெற்று, தரைப்படையும், கடற்படை விரிவாக்கத்துக்கான உட்கட்டமைப்பும் ஏற்படுத்தப்பட்டு வலிமைமிக்க பேரரசு இருந்தது. மேலும் இவரது போர் வெற்றிகள் மிகவும் புகழ்பெற்றவை. இவர் காலத்தில் ஓவியம், சிற்பம், நாடகம், நடனம், இசை, இலக்கியம் ஆகியவை நன்கு வளரத் தொடங்கின. தமிழ் மற்றும் சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளும் முக்கியத்துவம் பெற்றன.

கங்கை கொண்ட சோழபுரம் என்ற புதிய நகரத்தை நிறுவி, அங்கு ஒரு பெரிய கோவிலைகட்டியசோழப் பேரரசின் மிக முக்கியமான மன்னர்களில் ஒருவரான ராஜேந்திர சோழன் மக்கள் குறை தீர்த்து, நலன் காத்து, நாட்டிற்காக அர்ப்பணிப்போடு வாழ்ந்த மன்னர்.

ராஜேந்திர சோழன் மக்கள் குறை தீர்க்க எப்படி பணியாற்றினாரோ அதே போல நமது பாரதப் பிரதமர் மோடியும் மக்கள் குறை தீர்த்து, நாட்டை வளர்ச்சிப்பாதையில் கொண்டு சென்று, நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்து கொள்வது நமக்கு உறுதுணையாக இருக்கிறது.

தமிழ்நாட்டு மக்கள் நலன் காக்க, தமிழ்நாட்டை வளர்ச்சிப்பாதைக்கு கொண்டு செல்ல காரணகர்த்தாவாக விளங்கும் பாரதப் பிரதமர் கங்கை கொண்ட சோழபுரத்திற்கு வருகை புரிவது மிகவும் பொருத்தமானது.

பாரதப் பிரதமர் கங்கை கொண்ட சோழபுரத்தில் நடக்கும் ஆடித் திருவாதிரை விழாவை ஒட்டி பிரகதீஸ்வரர்கோவிலில் கங்கை நீரால் பிரகதீஸ்வரருக்கு நடைபெறும் மகா அபிஷேக நிகழ்வில்கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்வதும் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதும் மகிழ்ச்சிக்குரியது.

ராஜேந்திர சோழ மன்னரின் வரலாற்றை இன்றும் நாம் அறிந்து இன்புறுவதற்கு ஏற்ப அவரைப் போற்றி புகழ் பாடுவதற்காக பிரதமர் மோடி வருவதை தஞ்சை தரணி மட்டுமல்ல தமிழ்நாடே வரவேற்று, சோழர் காலத்து ஆட்சியை, ஆன்மிகத்தை பறைசாற்றுவோம் என அதில் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், மறுகால்குறிச்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் சுகுமார் தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

கேரள சிறையில் இருந்து தப்பிய

'ஒற்றைக் கை' ஆயுள் தண்டனை குற்றவாளி மீண்டும் கைது!

போலீசார் நடவடிக்கை!!

கண்ணூர்,ஜூலை.26–
கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டம் ஷோரனூர் அருகே மஞ்சக்கல் பகுதியை சேர்ந்தவர் இளம்பெண் சவும்யா (23). இவர் கடந்த 2011ம் ஆண்டு பிப்ரவரி 1ம் தேதி இரவு எர்ணாகுளத்தில் இருந்து ஷோரனூருக்கு பயணிகள் ரயிலில் சென்றுள்ளார். அந்த ரயில் பெட்டியில் சவும்யா மட்டும் தனியாக இருந்துள்ளார்.

அப்போது சவும்யா பயணித்த ரயில் பெட்டியில் ஏறிய தமிழகத்தின் கடலூர் மாவட்டம் விருத்தாச்சலத்தை சேர்ந்த சார்லி தாமஸ் என்ற கோவிந்தசாமி (வயது 30) என்பவர் ஏறியுள்ளார். இவருக்கு ஒரு கை மட்டுமே உண்டு. அங்கு தனியாக இருந்த சவும்யாவை கொடூரமாக தாக்கி, ரயிலில் இருந்து வெளியே கோவிந்தசாமி தள்ளினார்.

பின்னர் அவரும் கீழே குதித்து, காயமடைந்து ரயிம் தண்டவாளம் அருகே கிடந்த சவும்யாவை பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். இதைத் தொடர்ந்து சவும்யாவின் செல்போன், பர்ஸில் இருந்த பணத்துடன் கோவிந்தசாமி தப்பியோடி விட்டார். தண்டவாளம் அருகே காயத்துடன் இருந்த சஷம்யாவை, அருகிலிருந்த கிராம மக்கள் மீட்டு திருச்சூரில் உள்ள மருத்துவமனையில் சேர்த்தனர். ஆனால், 2 நாட்களுக்குப் பின்னர் 2011ம் ஆண்டு பிப்ரவரி 6ம் தேதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் சவும்யா.

போலீஸார் தீவிர விசாரணை நடத்தி, கோவிந்தசாமியை கைது செய்தனர். நீதிமன்றத்தில் கோவிந்தசாமிக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் அவருடைய மரண தண்டனையை உச்ச நீதிமன்றம் ஆயுள் தண்டனையாக குறைத்ததையடுத்து கோவிந்த சாமி, கண்ணூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்நிலையில், சிறையில் இருந்து கோவிந்தசாமி நேற்று அதிகாலை தப்பிச் சென்றுவிட்டார். இது தொடர்பாக தகவல் அறிந்த சிறைத்துறை அதிகாரிகள், போலீஸார் இணைந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

கண்ணூரைச்சுற்றியுள்ள பகுதியில் போலீஸார் ரோந்து சுற்றி வந்து கோவிந்தசாமியைத் தீவிரமாகத் தேடினர். இந்நிலையில், 4 மணி நேர தேடுதல் வேட்டைக்குப்பின் கண்ணூரில் உள்ள தலப்பு என்ற பகுதியில் இருந்த பாழடைந்தகிணற்றுக்குள் கோவிந்தசாமி பதுங்கி இருந்தது தெரியவந்தது. இதையடுத்து அவரை கைது செய்த போலீஸார், மீண்டும் கண்ணூர் மத்திய சிறையில் அடைத்தனர்.

ஒற்றை கை மட்டுமே உடையவர் என்பதால் போலீஸார் கண்ணூர் அருகிலுள்ள பகுதியில் எளிதாக விசாரணை நடத்தி அடையாளம் காண முடிந்துள்ளது.

சிறையிலிருந்து ஆயுள் தண்டனைக் கைதி தப்பிச் சென்ற சில மணி நேரங்களில் அவரைக் கைது செய்த அதிகாரிகளுக்கு போலீஸ் உயர் அதிகாரிகள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

ஒரு கை மட்டுமே உள்ள நிலையில், சிறையிலிருந்து அவர் தப்பியது எப்படி என்பது குறித்து சிறைத்துறை அதிகாரிகள்விசாரணைநடத்தி வருகின்றனர்.

பாலக்கோடு அருகே இன்று

மின்கம்பத்தில் மோதி தலைக்குப்புற கவிழ்ந்த லாரி!

காயத்துடன் டிரைவர் உயிர்தப்பினார்!!

பாலக்கோடு.ஜூலை.26
கர்நாடகா மாநிலம், பெங்களூருவில் இருந்து பட்டாசு தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு பேப்பர்ரோல்களை ஏற்றி கொண்டு ஒரு சரக்கு லாரி , ஓசூர் – தர்மபுரி அதிவிரைவு தேசிய நெடுஞ்சாலை வழியாக சிவகாசி நோக்கி சென்றது. தர்மபுரி மாவட்டம், புலிகரையைச் சேர்ந்த அரவிந்த் (28) என்பவர் இந்த சரக்கு லாரியை ஓட்டிச் சென்றார்.

இன்று, பாலக்கோடு அடுத்த, எர்ரனஅள்ளி சாலையில் சென்று கொண்டிருக்கும்போது, அந்த லாரி திடீரென நிலை தடுமாறியது. மின்சார கம்பத்தில் மோதி தலைகுப்புற கவிழ்ந்தது. இதில் அதன் டிரைவர், லாரிக்கு அடியில் சிக்கி படுகாயமடைந்தார். விபத்தை அறிந்தவுடன் அருகில் இருந்தவர்கள், ஓடோடி வந்து படுகாயத்துடன் உயிர் தப்பிய டிரைவரை மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் பாலக்கோடு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர்.

சாலையின் ஓரத்தில் லாரி கவிழ்ந்ததால், போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படவில்லை.லாரியை கிரைன் மூலம் அப்புறப்படுத்தும் பணியில், பாலக்கோடு போலீசார் ஈடுபட்டனர். மின்சாரக் கம்பத்தில் லாரி மோதியதால் இந்தபகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

விபத்து குறித்து போலீசாரின் முதல் கட்ட விசாரணையில் சரக்கு லாரியின் ஓட்டுநர் தூக்க கலக்கத்தில் இருந்ததாக தெரியவந்தது.

இந்த அதிவிரைவு சாலையானது ,பணிகள் முழுமையாக நடைபெறாமல், திறந்து வைக்கப்பட்டதால் , அடிக்கடி இந்த பகுதிகளில் தொடர் விபத்து ஏற்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

தூத்துக்குடி பாளைரோடு தமிழ்ச்சாலை பகுதியில் உள்ள பூங்காவில் தூத்துக்குடி மாநகராட்சி சார்பில் அமைக்கப்பட்டுள்ள படிப்பக வளாகத்தினை பேரூராட்சிகளின் இயக்குநர் /மாவட்ட கண்காணிப்பு அலுவலர் பிரதீப்குமார், கலெக்டர் க. இளம்பகவத், தலைமையில் நேரில் சென்று பார்வையிட்டு, படிப்பகத்தில் படித்து வரும் மாணவ, மாணவியர்களிடம் அங்குள்ள வசதிகள் குறித்து கேட்டறிந்தார்.

கனமழையால்

சுருளி அருவியில் வெள்ளப்பெருக்கு!

சுற்றுலா பயணிகள் குளிக்க தடை!!

கம்பம், ஜூலை,26–
கம்பம் அருகே உள்ள மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் கனமழை பெய்ததால் சுருளி அருவியில் வெள்ளப்பெருக்கு குளிக்க வனத்துறையினர் தடை விதித்துள்ளனர்.

தேனி மாவட்டம் கம்பம் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் உள்ள சுருளி அருவி சுற்றுலாத் தலமாகவும் ஆன்மீக தலமாகவும் விளங்கி வருகிறது.

இந்த அருவியில் ஏராளமான பொதுமக்கள் குளித்துவிட்டு சாமி தரிசனம் செய்துவிட்டுசெல்வதுவழக்கம்.

இந்நிலையில் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் தொடர்ந்து தென்மேற்கு பருவமழை கனமழையாக பெய்து, அருவி நீர்பிடிப்பு பகுதிகளான அரிசி பாறை, ஈத்தக்காடு , தூவானம் அணை நிரம்பி வனப் பகுதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

மேலும் காட்டு நீரோடைகள் சுருளி அருவியில் கலந்து வெல்லமாக கொட்டுகிறது, சுற்றுலாப் பயணிகள் அருவிக்கு செல்லும்சாலை மற்றும் படிக்கட்டுகள், முழுவதிலும் வெள்ளம் சூழ்ந்து தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது.

மேலும் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியிலான மேகமலை ,இரவங்கலார் ,மகாராஜா மெட்டு வெண்ணியாறு உள்ளிட்ட பகுதிகளில் கனமழை பெய்வதால் தொடர்ந்து சுருளி அருவிக்கு நீர்வரத்து அதிகரித்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் சுற்றுலாப் பயணிகள் சுருளி அருவியில் குளிப்பதற்கு தடை விதித்துள்ளனர்.

மேலும்கனமழைபெய்து வருவதால் அருவி பகுதிக்கு பொதுமக்கள் யாரும் வர வேண்டாம் என கம்பம் வனச்சரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ராஜஸ்தானில் கோவிலில் வினோதம்:

வெள்ளி ரிவால்வர், துப்பாக்கி தோட்டாவை காணிக்கையாக செலுத்திய பக்தர்!

ஜெய்ப்பூர், ஜூலை 26
ராஜஸ்தானில் கடவுளுக்கு வெள்ளி ரிவால்வர் மற்றும் துப்பாக்கி தோட்டாக்களை பக்தர் காணிக்கையாக செலுத்தியது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் சித்தோர்கரில் உள்ள புகழ்பெற்ற சவாரியா சேத் கோவில் அமைந்துள்ளது. இங்கு தோன்றிய கிருஷ்ணர், செல்வத்தின் அதிபதியான சேத் என்று வணங்கப்படுகிறார். எனவே இந்த கோவிலுக்கு வரும் பக்தர்கள் தங்கள் நினைத்தது நடந்தால் அதற்கு காணிக்கையாக பல்வேறு பொருட்களை வழங்கி நேர்த்திக்கடன் செலுத்துகிறார்கள். அந்த வகையில் பெயர் குறிப்பிடாத பக்தர் ஒருவர் விசித்திரமான பரிசை வழங்கியுள்ளார். அந்த வகையில் அவர் ஒரு வெள்ளி ரிவால்வர் மற்றும் துப்பாக்கி தோட்டாக்களை காணிக்கையாக வழங்கினார். இரண்டும் சேர்ந்து ஒரு கிலோகிராம் எடை கொண்டவை என்று கோயில் அதிகாரிகள் தெரிவித்தனர். இவற்றுடன், பக்தர் இரண்டு வெள்ளி பூண்டு பற்களையும் கடவுளின் உண்டியலில் போட்டுள்ளார். இருப்பினும், கடவுளுக்கு ஒரு ஆயுதம் காணிக்கையாக வழங்கப்படுவது இதுவே முதல் முறை என்று கோயில் தலைவர் ஜானகி தாஸ் கூறினார்.

இதற்கிடையில், கடந்த ஆண்டு ராஜஸ்தானில் பூண்டின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இதனால் பூண்டுவிவசாயிகள்பெரும் லாபம் ஈட்டி அதை கடவுளுக்கு காணிக்கையாக வழங்கியிருக்கலாம் என்று கூறப்படுகிறது. மேலும் இந்த கோவிலுக்கு வருகை தரும் பக்தர்கள் கடவுளுக்கு இது போன்ற வித்தியாசமான பரிசுகளை வழங்குவது இது முதல் முறை அல்ல. கடந்த காலங்களில், வெள்ளி பெட்ரோல் பம்ப், டிராக்டர், மடிக்கணினி, விமானம் மற்றும் ஐபோன் போன்ற பரிசுகளும் வழங்கப்பட்டன. இருந்தாலும் துப்பாக்கி, தோட்டாக்களை காணிக்கையாக பக்தர் வழங்கிய சம்பவம் அதிர்ச்சி தருவதாக உள்ளது.

திருப்பூரில் இன்று அதிகாலை

பட்டாசு கடையில் திடீர் தீ விபத்து!

உயிர்சேதம் தவிர்ப்பு!!

திருப்பூர்,ஜூலை.26–
திருப்பூர் – கொங்கு மெயின் ரோட்டில் உள்ள பட்டாசு கடையில் இன்று அதிகாலை திடீரென தீ விபத்து ஏற்பட்டது. இதில் பல லட்சம் மதிப்பிலான பட்டாசுகள், பிளாஸ்டிக் பொருட்கள் தீயில் எரிந்து சேதமானது. இது குறித்து திருப்பூர் வடக்கு போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருப்பூர் கொங்கு மெயின் ரோடு பகுதியில், தூத்துக்குடி மாவட்டத்தை சேர்ந்த முருகேசன் என்பவர் பட்டாசு மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனை செய்யும் கடையை நடத்தி வருகிறார்.

இந்நிலையில், இன்று அதிகாலை கடையிலிருந்து கரும்புகை வெளியே வர துவங்கியுள்ளது. இதனை கண்ட கடையிலேயே தங்கியிருந்த கடை உரிமையாளர் முருகேசன் உடனே வெளியே வந்தார்.

தொடர்ந்து வேகமாக பரவிய தீ காரணமாக அங்கிருந்த பட்டாசுகள் சரமாரியாக வெடித்தது. இதனால் அப்பகுதியில் கடுமையான புகைமூட்டம் காணப்பட்டது.

தொடர்ந்து திருப்பூர் வடக்கு தீயணைப்பு மற்றும் போலீசாருக்கு தகவல் அளிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தீயணைப்புத் துறையினர் தீயை அணைத்தனர்.

அதிகாலை நேர விபத்து என்பதால் அசம்பாவித சம்பவங்கள் ஏதும் ஏற்படவில்லை.

இது குறித்து போலீசார் மேற்கொண்ட விசாரணையில், கடந்த சில தினங்களுக்கு முன்புதான் முருகேசன் பல லட்சம் மதிப்பிலான பட்டாசு மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை விற்பனைக்காக வாங்கி வைத்து அவை தீ விபத்தில் சேதமடைந்தது தெரியவந்தது.

தொடர்ந்து தீ விபத்திற்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இச்சம்பவத்தால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியம், குலையநேரி ஊராட்சி, சுப்பையாபுரத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமினை மாவட்ட கவுன்சிலர் வழக்கறிஞர் கனிமொழி தொடங்கி வைத்து, பார்வையிட்டார்.

ஊத்தங்கரை அருகே

மோட்டார் சைக்கிள் மீது வேன் மோதி 2 பேர் பலி!

கடனை வசூலித்துவிட்டு திரும்பியபோது பரிதாபம்!!

ஊத்தங்கரை,ஜூலை,26–
மோட்டார் சைக்கிள் மீது சுற்றுலா வேன் மோதியதில் 2 வாலிபர்கள் பலியானார்கள்.

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அருகே உள்ள தம்மா கவுண்டனூரை சேர்ந்தவர் நாகராஜ் இவருடைய மகன் பிரகாஷ் (28). கூலி தொழிலாளி. இவரும் திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி அருகே உள்ள தோக்கியத்தை சேர்ந்த ஞானசேகரன் மகன் லக்ஷ்மணன் (27) என்பவரும் சேலத்தைச் சேர்ந்த ஒருவரிடம் கொடுத்த பணத்தை திரும்ப வசூலித்துக் கொண்டு ஊத்தங்கரையில் இருந்து நேற்று இரவு மோட்டார் சைக்கிளில் மத்தூர் நோக்கி சென்றனர்.

கிருஷ்ணகிரி திருவண்ணாமலை தேசிய நெடுஞ்சாலையில் வீரியம்பட்டி தனியார் பள்ளி அருகே செல்லும்போது ஒகேனக்கலில் இருந்து கடலூர் நோக்கி சென்ற டூரிஸ்ட் வேன் மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் பிரகாஷ் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். படுகாயமடைந்த லட்சுமணன் ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

விபத்து குறித்து ஊத்தங்கரை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். அதைத் தொடர்ந்து விபத்தில் இறந்த இரண்டு பேருடைய சடலங்களையும் மீட்டு பிரேத பரிசோதனைக்காக ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். விபத்து தொடர்பாக டூரிஸ்ட் வேன் ஓட்டுனர் கடலூர் மாவட்டத்தை சேர்ந்த சிங்கேரி குடி அருகே உள்ள புது கடையை சேர்ந்த தட்சிணாமூர்த்தி (31) என்பவர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள். டூரிஸ்ட் வேன் மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் விபத்தில் இரண்டு பேர் பலியான சம்பவம் அந்தப் பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியது.

இந்தப் பகுதியில் அடிக்கடி விபத்து ஏற்படுவதால் விபத்து குறித்த முன்னெச்சரிக்கை அறிவிப்பு பலகைகள் வைக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆகஸ்ட் 1 முதல் ஆன்லைனில் ஹோமம் டிக்கெட்டுகள்!

திருப்பதி தேவஸ்தானம் அறிவிப்பு!!

திருப்பதி,ஜூலை.26–
ஆகஸ்ட் 1ம் தேதி முதல் ஆன்லைனில் ஸ்ரீநிவாச திவ்ய அனுக்ரஹ ஹோமம் டிக்கெட்கள் வழங்கப்படும் என திருமலை திருப்பதி தேவஸ்தானம் அறிவித்துள்ளது.

திருப்பதி அலிபிரி நடைபாதை தொடக்கத்தில் கோசாலை அருகே பெருமாள் கோயில் உள்ளது.

இங்கு தினமும் ஸ்ரீநிவாச திவ்ய அனுக்ரஹ ஹோமம் நடைபெறுகிறது.

இதற்காக 150 ஆன்லைன் டிக்கெட்களும், நேரில் 50 டிக்கெட்களும் பக்தர்களுக்கு வழங்கப்பட்டு வந்தன. இந்நிலையில் வரும் ஆகஸ்ட் 1ம் தேதி முதல் ஆன்லைனிலேயே தினமும் 200 ஹோமம் டிக்கெட்டுகள் வழங்கப்படும் என திருப்பதி தேவஸ்தானம் அறிவித்துள்ளது.

இந்த டிக்கெட்டின் விலை ரூ.1,000 ஆகும். இதில் தம்பதி சமேதராக பக்தர்கள் கலந்து கொள்ளலாம்.

ஹோமம் முடிந்த பின்னர் இதில் பங்கேற்ற தம்பதி ரூ .300 டிக்கெட்கள் இரண்டை பெற்று , திருமலைக்கு சென்று ஏழுமலையானை தரிசிக்கலாம் என தேவஸ்தானம் அறிவித்து உள்ளது.

VTM லிமிடெட்
பதிவு அலுவலகம்: சூலக்கரை, விருதுநகர்.
CIN : L17111TN1946PLC003270
இணையதளம் : www.vtmill.com தொலைபேசி : 0452-2482595

அறிவிப்பு

செபி (SEBI) நிபந்தனைகள் 2015ம் (பட்டியலிடும் தேவைகள் மற்றும் அறிவித்தல் தேவைகள்) நிபந்தனைகள் 29 மற்றும் 47க்கு இணங்க இக்கம்பெனியின் இயக்குநர்கள் கூட்டம் 04.08.2025, திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு தியாகராசர் மில்ஸ் வளாகம், கப்பலூர், மதுரை-625 008 இல் உள்ள தலைவர் அலுவலகத்தில் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. இந்தக் கூட்டம் ஜூன் 30, 2025 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான நிறுவனத்தின் தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகளை (Ind-As-ன் கீழ்) பரிசீலித்து பதிவு செய்யவும், வாரியக் கூட்டத்தின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை பரிசீலித்து அங்கீகரிப்பதற்காகக் கூட்டப்படுகிறது. இந்த அறிவிப்பு, பங்கு வர்த்தக நிறுவனத்தின் இணையதளம் www.bseindia.com இல் உள்ளது.

இடம்: சூலக்கரை, விருதுநகர்.
நாள்: 24.07.2025
VTM லிமிடெட்டிற்காக,
கா.பிரியதர்ஷினி
கம்பெனி செயலாளர்

சேரன்மகாதேவி உட்கோட்ட நடுவர் மன்றம்,
அ4/ சி.ப எண்.241/2025

S.பாலகிருஷ்ணன்,
த/பெ.சிவலிங்கநாடார்,
5/94, சத்திமூர்த்தி தெரு,
சிவந்திபுரம் கிராமம்,
அம்பாசமுத்திரம் வட்டம்,
திருநெல்வேலி மாவட்டம்.
- மனுதார்

அறிவிப்பு

மனுதார் தனது மகன் ராஜா என்பவர் 25.04.1997 அன்று மேற்படி முகவரியில் வைத்து பிறந்ததை பதிவு செய்ய தவறிவிட்டார். ஷை பிறப்பை பதிவு செய்ய வேண்டி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஷை பிறப்பு மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு வெளியான 15 தினங்களுக்குள் சேரன்மகாதேவி உட்கோட்ட நடுவர் மன்றத்தில் நேரில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளவே இந்த அறிவிப்பு ஆகும்.

S.பாலகிருஷ்ணன், மனுதார்

பெருநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை
நீதிபதி: XXIII Assistant Judge
இ.க. மனு எண்.5 & 6/2025 இல்
அ.வ.எண்.5141 Of 2024

S.ஹிமாலயகுமார்,
த/பெ.சுகுமாறன்.
எண்.3/163, கங்கையம்மன் கோவில் தெரு,
பலவயல்,
தீர்த்தகிரியம்பட்டு,திருவள்ளூர்,
வடகரை,தமிழ்நாடு -600 052.
\-மனுதாரர் / 4ஆம் பிரதிவாதி

\-எதிர்-

1. M/s.Burj Property Developers,
   -1 ஆம் எதிர்மனுதாரர் / வாதி
2. அசோக்குமார் & 5 Others
   த/பெ.பரமசிவம், எண்.89, மேற்கு வீதி,
   கடம்பன்குளம்,
   தெற்கு வள்ளியூர்,
   பனங்குடி,
   திருநெல்வேலி-627 109.
   -2 முதல் 7 ஆம் எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

மேற்படி அசல் மனுதாரர்/4ஆம் பிரதிவாதி தாக்கல் செய்த இடைக்கால மனு எண். 5/2025 & 6/2025-ன் வாய்தா 30.07.2025 அன்று மேற்படி நீதிமன்றத்தில் காலை 10.30 மணிக்கு விசாரணைக்கு வருகிறது. அப்பொழுது 2ஆம் எதிர் மனுதாரர்/ 3ஆம் பிரதிவாதி நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்களின் எதிருரையை தாக்கல் செய்யலாம். ஆஜராக தவறும்பட்சத்தில் அம்மனுக்களில் முடிவு அவருக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும்.

நே.சிவகுமார்,
வழக்கறிஞர், சென்னை.

பெருநகர உரிமையியல் நீதிமன்றம், ஆலந்தூர் சென்னை
நீதிபதி: XXI Assistant Judge
இல்
O.S.No.476 of 2025 U/O.XXXVII CPC

இ.சுரேஷ்,
த/பெ.இசக்கி பாண்டியன்.
109, ஸ்ரீலட்சுமி நகர், 2-வது தெரு,
ஆழ்வார்திருநகர்,
சென்னை -600 087.
-வாதி

1. ராஜேஷ்வரன் த/பெ.கண்ணையா,
   மகான் கோவில் தெரு,சாத்தான்குளம்,
   தூத்துக்குடி-628 704.
2. செல்வி , க/பெ.ராஜேஷ்வரன்,
   LIG-1473,மகிழ்ச்சி நகர்,
   பெருமாள்புரம், பாளையம்கோட்டை,
   திருநெல்வேலி-627 007.
   -பிரதிவாதிகள்

அறிவிப்பு

பிரதிவாதிகளிடம் கடனை வசூலிக்க வேண்டி மேற்படி அசல் வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார். இவ்வறிவிப்பு தேதியில் இருந்து 10 நாட்களுக்குள் நீதிமன்றத்தில் தோன்றியதற்கான அறிவிப்பை வாதிக்கு 2ஆம் பிரதிவாதி வழங்க வேண்டும் என்றும் அதனைத்தொடர்ந்து Summon For Judgment வாதி வழங்குவார் என்றும் அதில் இருந்து 10 நாட்களுக்குள் வழக்கில் எதிர் வழக்காட அனுமதி வேண்டி 2ஆம் பிரதிவாதி மனு செய்யலாம் என்றும், நீதிமன்றத்தில் இவ்வறிவிப்பில் இருந்து 10 நாட்களுக்குள் 2ஆம் பிரதிவாதி தோன்றவில்லை என்றால் நீதிமன்றம் மேற்படி அசல் வழக்கில் இறுதி தீர்ப்புரையை வழங்கும் என்றும், வழக்கு 18.08.2025 அன்று காலை 10.30 மணிக்கு (விசாரணைக்கு) மேற்படி நீதிமன்றத்தில் அழைக்கப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

நே.சிவகுமார்,
வழக்கறிஞர், சென்னை.

கோவில்பட்டியில்

வழக்கறிஞர் சங்க கட்டிட திறப்பு விழா!

மாவட்ட நீதிபதி திறந்து வைத்தார்!!

கோவில்பட்டி, ஜூலை : 26
தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி அரசு அலுவலக வளாகப் பகுதியில் சார்பு நீதிமன்றம் ,குற்றவியல் நீதிமன்றம் விரைவு நீதிமன்றம் செயல்பட்டு வருகின்றன இங்கு பணியாற்றும் வழக்கறிஞர் சங்கத்திற்காக புனரமைக்கப்பட்ட புதிய சங்க கட்டிட திறப்பு விழா நடைபெற்றது விழாவிற்கு கோவில்பட்டி வழக்கறிஞர் சங்க தலைவர் சங்கர்கணேஷ் தலைமை தாங்கினார். சிறப்பு அழைப்பாளராக மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி வசந்தி ரிப்பன்வெட்டி திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் சார்பு நீதிபதி மாரிக்காளை, முனிசீப் நீதிபதி கருப்பசாமி, ஜேஎம் 1 நீதிமன்ற நீதிபதி ஆனந்த் ஜேஎம் 2 நீதிமன்ற நீதிபதி மணிமேகலை பார் கவுன்சில் மெம்பர் மைக்கேல் ஸ்டானிஸ் பிரபு, பார் கவுன்சில் சங்கச்செயலாளர் ஜெயசீலன், துணைத் தலைவர் சிவனுப்பாண்டி, துணைச் செயலாளர் முனிஸ்வரி, பொருளாளர் ரேவதி, வழக்கறிஞர்கள் போஸ், ரங்கராஜன், மணிகண்டன், ஆழ்வார்சாமி, சிவக்குமார், ஆண்ட்ரூஸ், சாம்ராஜ், முத்துசாமி, சந்திரசேகர், கார்த்திக், சக்திவேல், ராஜேஷ், சந்திரன், பாரதி, ராஜ்மோகன், பெஞ்சமின், உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கோவில்பட்டியில் வழக்கறிஞர் சங்க புதிய கட்டிட திறப்பு விழாவில் மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி வசந்தி ரிப்பன் வெட்டி திறந்து வைத்த போது எடுத்த படம்.

பிரதமர் மோடியுடன்...

3–ம் பக்கத் தொடர்ச்சி

தூத்துக்குடி துறைமுக சாலையின் ஆறு வழிப் பாதை போன்றவற்றை, நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

பின்னர் தூத்துக்குடி வ.உ.சி., துறைமுகத்தில், 285 கோடி ரூபாயில், ஆண்டுக்கு, 69 லட்சம் டன் சரக்குகளை கையாளும் திறனில் அமைக்கப்பட்டுள்ள, வடக்கு சரக்கு தளவாட நிலையம் 3–யும் திறந்து வைக்கிறார்..

மேலும் திருநெல்வேலி மாவட்டம் கூடங்குளம் அணுமின் நிலையத்தில் அமைக்கப்படும் தலா, 1,000 மெகாவாட் திறன் உடைய சுமார் 550 கோடி ரூபாய் திட்ட செலவிலான மூன்றாவது, நான்காவது அணு உலைகளில் இருந்து மின்சாரத்தை வெளியே கொண்டு செல்வதுடன், மின் வழித்தட பணிக்கு, பிரதமர் மோடி அடிக்கல் நாட்டுகிறார்.

மோடியுடன் எடப்பாடி சந்திப்பு

தூத்துக்குடியில் நிகழ்ச்சிகளை முடித்த பின், பிரதமர் மோடி தனி விமானம் மூலம் திருச்சிக்கு வருகிறார். திருச்சி விமான நிலையத்தில் அவரை அமைச்சர்கள் கே.என்.நேரு, மகேஷ் பொய்யாமொழி, மற்றும் பா.ஜ.க., கூட்டணி கட்சி நிர்வாகிகள் வரவேற்பு அளிக்கின்றனர்.

விமான நிலையத்தில் வைத்து பிரதமர் மோடியை அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி சந்திக்க உள்ளார். இது தொடர்பாக ஏற்கனவே செய்தி வெளியானது. ஆனால் அதை யாரும் உறுதிப்படுத்த வில்லை. எடப்பாடி பழனிசாமி கூட மழுப்பலான பதிலையே கூறியிருந்தார்.

இந்த நிலையில் அவர் இன்று சந்திப்பது உறுதியாகி உள்ளது. அப்போது கூட்டணி குறித்து இரு தலைவர்களும் முக்கிய கருத்துகளை பரிமாறிக் கொள்வார்கள் என்று தெரியவந்துள்ளது.

அ.தி.மு.க. – பா.ஜ.க. இடையே மீண்டும் கூட்டணி ஏற்பட்ட பிறகு இந்த இரு தலைவர்களும் சந்திப்பது இதுதான் முதல் முறையாகும். இந்த கூட்டணிக்கு அ.தி.மு.க. தான் தலைமை வகிக்கிறது. எடப்பாடி தான் முதல்வர் வேட்பாளர்.

வெற்றிபெற்றால்தனித்து ஆட்சிஅமைப்போம்என்று எடப்பாடி கூறிவருகிறார். ஆனால் ஆட்சியில் பங்கு வகிப்போம் என்று உள்துறை அமைச்சர் அமித்ஷா கூறியுள்ளார்.

இந்த முரண்பாடுகள் குறித்து மோடியிடம் எடப்பாடி பழனிசாமி விளக்கம் அளிப்பார் என்று கூறப்படுகிறது. குறிப்பாக தனியாட்சி என்பதை பிரதமர் மோடி ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்த உள்ளார்.

இந்த சந்திப்பு முடிந்த பிறகு பிரதமர் மோடி விமான நிலையத்தில் இருந்து கார் மூலம் கண்டோன்மெண்ட் பகுதியில் உள்ள தங்கும் விடுதிக்கு சென்று தங்கி ஓய்வெடுக்கிறார்.

இதையடுத்து நாளை காலை 11 மணிக்கு தங்கியிருக்கும் தனியார் ஓட்டலில் இருந்து வெஸ்ட்ரி பள்ளி ரோடு, கண்டோன்மெண்ட் சாலை வழியாக பாரதிதாசன் சாலை, ஒத்தக்கடை, தலைமை தபால் நிலையம், கல்லுக்குழி பாலம், டி.வி.எஸ். டோல்கேட், சுப்பிரமணியபுரம், ஜெயில் கார்னர் , கொட்டப்பட்டு வழியாக விமான நிலையம் செல்லும் பிரதமர் மோடி அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் கங்கை கொண்ட சோழபுரம் செல்கிறார். அங்கு ராஜேந்திர சோழன் பிறந்த நட்சத்திரமான ஆடி திருவாதிரை விழாவில் பங்கேற்று அவரது நினைவாக நாணயத்தை வெளியிடுகிறார்.

முன்னதாக கோவிலை சுற்றி பார்த்து சிற்பங்களை கண்டு ரசிக்கும் பிரதமர் மோடி கங்கையில் இருந்து கொண்டு வரப்பட்ட சிறப்பு தீர்த்ததால் அங்குள்ள சிவ பெருமானுக்கு அபிஷேகம் செய்கிறார்.

இந்த நிகழ்ச்சியில் தமிழக அமைச்சர்கள், தமிழகத்தை சேர்ந்த சுமார் 25 சைவ மடங்களின் தலைவர்கள், கூட்டணிக் கட்சி தலைவர்கள் பங்கேற்க உள்ளனர். இந்த நிகழ்ச்சியில் புகழ்பெற்ற இசையமைப்பாளர் இளையராஜாவின் இசை நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

இந்த நிகழ்ச்சியை முடித்து கொண்டு ஹெலிகாப்டர் மூலம் திருச்சி விமானம் மூலம் வந்தடையும் பிரதமர் மோடி திருச்சியில் இருந்து தனி விமானம் மூலம் டெல்லி செல்கிறார்.

பிரதமர் மோடி 2 நாள் பயணமாக தமிழகம் வர உள்ளதால் தூத்துக்குடி, திருச்சி, அரியலூர் போன்ற மாவட்டங்களில் ஏராளமான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கைதான வடமாநில...

3–ம் பக்கத் தொடர்ச்சி

உள்ள ஓட்டலில் வேலை செய்து வந்துள்ளார். கஞ்சா போதைக்கு அடிமையான அந்த இளைஞர், ஓட்டலுக்கு கூட செல்லாமல் தொடர்ந்து விடுமுறை எடுத்து வந்து உள்ளார். வாரம் தோறும் சனிக்கிழமை விடுமுறை எடுத்து தமிழக எல்லைப் பகுதியான கிராமங்களுக்கு சுற்றுலா போல வருவது அந்த நபரின் வழக்கமாக இருந்துள்ளது. அதன்படி சம்பவத்தன்று (சனிக்கிழமை 12ம் தேதி) அந்த இளைஞர் கும்மிடிப்பூண்டிக்கு வந்தது உறுதியானது.

கைது செய்யப்பட்ட இளைஞரின் புகைப்படத்தை பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட சிறுமியிடம் போலீசார் காண்பித்தபோது அவர் தான் குற்றவாளி என உறுதிப்படுத்தியதாக கூறப்படுகிறது. குற்றவாளி கைது செய்யப்பட்ட தகவல் தெரிந்ததும் நேற்று மாலை சிறுமியின் உறவினர்கள் ஆரம்பாக்கம் போலீஸ் நிலையத்தில் குவியத்தொடங்கினர்.

இந்நிலையில்,சிறுமியின் உறவினர்கள் ஆரம்பாக்கம் போலீஸ் நிலையத்தில் குவிந்ததால் கைது செய்யப்பட்ட வடமாநில இளைஞரை போலீசார் ரகசிய இடத்தில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர். இளைஞரிடம் தனிப்படை போலீசார் விடிய விடிய விசாரணை மேற்கொண்டனர். வடக்கு மண்டல ஐ.ஜி. அஸ்ரா கார்க் கைது செய்யப்பட்ட இளைஞரிடம் நேரில் விசாரணை நடத்தினார்.

கைது செய்யப்பட்ட இளைஞரை சம்பவம் நடைபெற்ற மாந்தோப்பிற்கு நேரில் அழைத்து சென்று அங்கு வைத்து விசாரணை நடத்த உள்ளனர்.

மேலும், வடமாநில இளைஞரை கோர்ட்டில் ஆஜர்படுத்தி காவலில் எடுத்து விசாரிக்க போலீசார் அனுமதி கேட்க உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் இளைஞர் கைது செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக ஐ.ஜி. அஸ்ரா கார்க் விளக்கம் அளித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில்,

சிறுமி பாலியல் வன்கொடுமை சம்பவத்தில் தேடப்படும் நபரின் அடையாளங்கள், கைதாகியுள்ள இளைஞருடன் ஒத்துப்போகிறது. முதற்கட்டமாக சந்தேகத்தின் அடிப்படையில் இளைஞரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

அடுத்தகட்ட விசாரணை தொடர்ந்து நடத்தப்படும். இளைஞரை சிறையிலடைப்பது குறித்து பின்னர் தெரிவிக்கப்படும். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள நபருக்கு 30 வயது இருக்கலாம்.

இந்த வழக்கை பொறுத்தவரை சம்பந்தப்பட்ட நபரை பிடிப்பதில் மிகுந்த சிரமம் இருந்தது. முக்கியமான வழக்கு என்பதால் முறையான விசாரணைக்கு பின் உறுதி செய்யப்பட்டு முழு விவரங்கள் அளிக்கப்படும்' என்றார்.

பள்ளி மாணவிக்கு...

3–ம் பக்கத் தொடர்ச்சி

பெற்றோர் பாளை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர். அதன்பேரில் இன்ஸ்பெக்டர் கோமதி விசாரணை நடத்தியதில் மாணவிக்கு தொடர்ந்து ரபீக் பாலியல் ரீதியில் தொந்தரவு கொடுத்தது தெரியவந்தது.

பின்னர் சம்பவம் தொடர்பாக ரபீக் மீது போக்சோ சட்டத்தின்கீழ் வழக்குப்பதிந்து நேற்று அவரை கைது செய்தனர். அதைத்தொடர்ந்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி பாளை மத்திய சிறையில் அடைத்தனர்.

கைது செய்யப்பட்ட ரபீக்கிற்கு ஏற்கனவே இருமுறை திருமணம் நடந்ததும் அவரின் நடவடிக்கை பிடிக்காமல் அவர்கள் அவரை விட்டுப் பிரிந்து சென்று விட்டனர் என்று கூறப்படுகிறது.

புதிதாக நியமனம் செய்யப்பட்ட தூத்துக்குடி தெற்கு மாவட்ட மகளிர் காங்கிரஸ் நிர்வாகிகளுக்கு ஊர்வசி அமிர்தராஜ் எம்.எல்.ஏ. மற்றும் மாநில மகளிர் காங்கிரஸ் தலைவி ஹசீனா சையத் ஆகியோர் நியமன கடிதங்களை வழங்கினர்.

தூத்துக்குடி தெற்கு மாவட்ட

மகளிர் காங்கிரஸ் நிர்வாகிகள் நியமன கூட்டம்!

எம்.எல்.ஏ.பங்கேற்பு!!

சாயர்புரம், ஜூலை 26
தூத்துக்குடி தெற்கு மாவட்ட மகளிர் காங்கிரஸ் நிர்வாகிகள் நியமன கூட்டம் தெற்கு மாவட்ட அலுவலகத்தில் வைத்து நடந்தது.

இக் கூட்டத்திற்கு தூத்துக்குடி தெற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவரும், ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினருமான ஊர்வசி அமிர்தராஜ் தலைமை வகித்து பேசினார். மாவட்ட மகளிர் காங்கிரஸ் தலைவி மாரியம்மாள் முன்னிலை வகித்து பேசினார். திருச்செந்தூர் வட்டார தலைவர் சற்குரு வரவேற்று பேசினார். சிறப்புவிருந்தினராக மாநில மகளிரணி தலைவி ஹசினா சையத் கலந்து கொண்டு பேசினார். தொடர்ந்து புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள தூத்துக்குடி தெற்கு மாவட்ட, வட்டார மற்றும் நகர மகளிர் காங்கிரஸ் நிர்வாகிகளுக்கு நியமன கடிதங்களை ஊர்வசி அமிர்தராஜ் எம்எல்ஏ மற்றும் மாநில மகளிர் காங்கிரஸ் தலைவி ஹசினா சையத் ஆகியோர் இணைந்து வழங்கினர். நிகழ்ச்சியில் தெற்கு மாவட்ட துணை தலைவர் சங்கர், பொருளாளர் எடிசன், தகவல் தொழில் நுட்ப மற்றும் சமூக ஊடக மாநில செயலாளர் முத்துமணி, மாநில பொது செயலாளர் சிவ களை பிச்சையா, இளைஞர் காங்கிரஸ் தலைவர் ராஜகுமாரன், வட்டார தலைவர்கள் தாசன், ஜெயராஜ், கோதண்டராமன், பார்த்தசாரதி, சொரிமுத்து பிரதாபன், ஜெயசீலன் துரை, சிவ பெருமாள், நகர தலைவர்கள் கருப்பசாமி, இசை சங்கர் மற்றும் மகளிர் காங்கிரஸ் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முடிவில் தெற்கு மாவட்ட துணை தலைவர் சங்கர் நன்றி கூறினார்.

சாயர்புரம்

தொடக்க பள்ளி மாணவர் சதுரங்க போட்டியில் வெற்றி!

சாயர்புரம் ஜூலை 26
சாயர்புரம் போப் நினைவு மேல்நிலைப்பள்ளியில் வட்டார அளவிலான சதுரங்க போட்டி நடைபெற்றது.

இதில் 32க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர். இந்த போட்டியில் 11 வயதிற்குட்பட்ட மாணவர் பிரிவில் சாயர்புரம் தூய மேரி மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளியின் 5ம் வகுப்பு மாணவன் அட்வின் ஜோன்ஸ் வட்டார அளவில் இரண்டாம் இடம் பிடித்து சாதனை படைத்தார்.

அவருக்கு சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கப்பட்டது.

மேலும் அப்பள்ளியின் தாளாளர் டாக்டர் பிரபாகர், தலைமை ஆசிரியர் ஆக்னஸ் ஜெயலின், உடற்கல்வி ஆசிரியர் நீதியின் சூரியன் ஜார்ஜ் மற்றும் ஆசிரியர்கள்பாராட்டினர்.

ஆலங்குளத்தில்

3 வீடுகளில் பூட்டு உடைத்து கொள்ளை!

ஒரே நாள் இரவில் துணிகரம்!!

ஆலங்குளம், ஜூலை 26:
தென்காசி மாவட்டம், ஆலங்குளத்தில் ஒரே இரவில் மூன்று வீடுகளில் 15 சவரன் நகைகள் மற்றும் ₹2லட்சம்ரொக்கம்கொள்ளையடித்து சென்ற மர்ம நபர்களை போலீசார் தேடி வருகின்றனர்.

காரையாறு சொரிமுத்து அய்யனார் கோவிலில் நடைபெற்ற ஆடி அமாவாசை திருவிழாவையொட்டி ஆலங்குளம் குருவன்கோட்டை சாலை ஓடை தெருவைச் சேர்ந்த சாலை பணியாளரான சுயம்பு (50) என்பவர் வீட்டை பூட்டி விட்டு குடும்பத்தினருடன் கோவிலுக்கு சென்றார்.

நேற்று முன்தினம் நள்ளிரவில் அவரது வீட்டின் பூட்டை கடப்பாரையால் உடைத்துஉள்ளேநுழைந்த மர்ம நபர்கள், பீரோவின் பூட்டை உடைத்து அதில் வைத்திருந்த கம்மல், மோதிரம் உட்பட 7 கிராம் நகைகளையும், மகள் திருமணத்திற்காக வைத்திருந்த ₹1.5 லட்சம் ரொக்கப் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றனர். அதிர்ஷ்டவசமாக, சுயம்பு தனது மகள் திருமணத்திற்காக வைத்திருந்த மேலும் 200 கிராம் நகைகளை வீட்டில் வேறு ஒரு இடத்தில் வைத்திருந்ததால், அவை கொள்ளையர்கள்கண்ணில்சிக்காமல் தப்பின.

மேலும் சுயம்புவின் வீட்டின் அருகிலேயே வசிக்கும் சொரிமுத்து என்பவரது வீட்டிலும் கொள்ளை நடந்துள்ளது. இவர் தனியார் பால் கம்பெனி ஊழியர் ஆவார். இவரும் சொரிமுத்து அய்யனார் கோயிலுக்குச்சென்றிருந்த நிலையில், கொள்ளையர்கள் இவரது வீட்டின் பூட்டை உடைத்து உள்ளே புகுந்து சல்லடை போட்டு தேடியுள்ளனர்.

வீட்டின் பீரோவில் வைத்திருந்த 4 கிராம் எடைகொண்ட 2 மோதிரங்கள் மற்றும் ₹10 ஆயிரம் மட்டுமே அவர்களுக்குக் கிடைத்துள்ளன. ஆலங்குளம் நேருஜி நகரில் தனியாக வசித்து வந்த கனியம்மாள் என்ற மூதாட்டியின் வீட்டிலும் கொள்ளை அரங்கேறியுள்ளது. இவரது வீட்டின் பூட்டையும் உடைத்த மர்ம நபர்கள், அங்கிருந்து 4 கிராம் நகைகளையும், ₹40 ஆயிரம் ரொக்கப் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

நேற்று ஒரே நாளில் நள்ளிரவில் சாலைப் பணியாளர், பால் வியாபாரி, மற்றும் ஒரு மூதாட்டி என மூன்று வீடுகளில் நடந்த இந்தக் கொள்ளைச் சம்பவங்கள் ஆலங்குளத்தில் பீதியை கிளப்பியுள்ளன. மொத்தமாக சுமார் 15 கிராம் நகைகள் மற்றும் ரூ. 2லட்சம்பணம்கொள்ளை போயுள்ளது.

இது தொடர்பாக ஆலங்குளம் போலீசார் வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணை செய்து வருகின்றனர்.

பாவூர்சத்திரம் அருகே

வாலிபர் விஷம் குடித்து தற்கொலை!

பெற்றோர்கள் கண்டித்ததால்!!

பாவூர்சத்திரம் , ஜூலை.26
பாவூர்சத்திரம் அருகே உள்ள மேலப்பாவூர் பிள்ளையார் கோவில் தெருவை சேர்ந்த முருகன் என்பவரது மகன் பூமணி (வயது 19) இவர் பத்தாம் வகுப்பு வரை படித்து விட்டு ஊரில் கூலி வேலை செய்து வந்துள்ளார் இந்நிலையில்சரிவரவேலைக்கு செல்லாமல் இருந்ததாக கூறப்படுகிறது. இதனால் அவரது பெற்றோர்கள் பூமணியை வேலைக்கு செல்லுமாறு கண்டித்ததால் மன வருத்தத்தில் இருந்த பூமணி வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் கடந்த 18ஆம் தேதி வயலுக்கு தெளிக்கும் பூச்சி கொல்லி மருந்தை குடித்துவிட்டு மயக்க நிலையில் இருந்தார் உடனடியாக அவரை மீட்ட அவரது பெற்றோர்கள் தென்காசி அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்த்த நிலையில் மேல் சிகிச்சைக்காக நெல்லை அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர் இந்நிலையில் சிகிச்சை பலனின்றி பூமணி பரிதாபமாக உயிரிழந்தார்.

இது குறித்து வழக்கு பதிவு செய்து பாவூர்சத்திரம் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

நெல்லை மாலை முரசு
முரசம்
26.07.2025

இளம் மாணவர்கள் விபரீத முடிவுக்கு காரணம் என்ன?

மனித வாழ்வின் மிக ஆரோக்கியமான வயதான பதின் பருவத்தில்இருப்பவர்கள்பலகாரணங்களால்விபரீதமான முடிவுகளைநாடுகிறார்கள்.சிறிய தோல்வியும் அவர்களை நிலைகுலைய வைக்கிறது. 2022–ஆம் ஆண்டில் மாணவர் தற்கொலையில், தமிழ்நாடு 1,416 தற்கொலைகளுடன் இரண்டாவது இடத்தைப் பிடித்திருந்தது. மனித வாழ்வில் உடல்நலக்குறைபாடுகள் மிகக் குறைவாக உள்ள, மகிழ்ச்சிகரமான பருவமான பதின் பருவத்தில் இருப்பவர்கள் எடுக்கும் இதுபோன்ற முடிவுகள் சம்பந்தப்பட்ட குடும்பத்தினரை நிலைகுலைய வைத்து விடுகின்றன. இந்திய மருத்துவ மாணவர்களில் ஆறில் ஒருவர் தற்கொலைக்கு முயற்சிக்கிறார்கள்.

உலக அளவில் 13 முதல் 19 வயதுக்கு இடைப்பட்ட வயதைச் சேர்ந்தவர்களின் மரணத்தில், தற்கொலை மூன்றாவதுகாரணமாகஇருப்பதாகஉலகசுகாதாரநிறுவனத்தின் புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. உளவியல் ரீதியாக எடுத்துக்கொண்டால் குழந்தைகளும் குமரப் பருவத்தினரும் இருகாரணங்களைநோக்கியே செயல்படுவார்கள். ஒன்று, சார்ந்திருத்தல் இரண்டாவது, தங்களுக்கான முக்கியத்துவம். பதின்பருவத்தில் இந்த இரண்டு அம்சங்களையும்தான் தங்கள் உலகில் அவர்கள் தேடுவார்கள் என்கிறார் உளவியல் நிபுணர் சுனில்குமார்.

முன்னெப்போதையும்விட குழந்தைகள் மீது மிகத்தீவிரமான கண்காணிப்பு இப்போது செலுத்தப்படுகிறது எனக் கூறும் அவர் குறிப்பாக, பெற்றோரின் கண்காணிப்பு மிகத் தீவிரமாக இருக்கிறது என தெரிவித்தார்.இவர்கள், ஒரு பக்கம் கல்வி சார்ந்து அழுத்தத்தை அளிக்கிறார்கள். மற்றொரு பக்கம், தம் குழந்தை இதைத்தான் சாப்பிட வேண்டும், இதைத்தான் பார்க்க வேண்டும், இதைத்தான் விளையாட வேண்டும் என தீவிர ஆதிக்கம் செலுத்துகிறார்கள். தாம் ஒரு முன்மாதிரிப் பெற்றோராக இருக்க நினைப்பதுதான் இதற்குக்காரணம். இதற்காக, தம் குழந்தைகளும் ஒரு முன்மாதிரிக் குழந்தையாக இருக்க வேண்டுமென நினைக்கிறார்கள்." என்கிறார். இதனால், அவர்களைத் தீவிரமாககண்காணித்து,அவர்களதுசிறுபிரச்சினைகளைக்கூட இவர்களே குறுக்கிட்டுத் தீர்க்கிறார்கள்.

பள்ளிக்கூடத்தில் சின்ன சண்டை வந்தால்கூட, பெற்றோர் போய் சண்டை போடுகிறார்கள். இதனால் இந்தக் குழந்தைகள் வளர்ந்த பிறகு, தாமாக பிரச்சினைகளை எதிர்கொள்ள முடிவதில்லை. இதனால், பெற்றோரால் குறுக்கிட முடியாத இடத்தில், அவர்களால் ஒரு சிறு தோல்வியைக்கூட எதிர்கொள்ள முடிவதில்லை என்றும் சிறிய தோல்வியை எதிர்கொள்ளும்போதுகூட பெரும் விரக்தி அடைவதால் ஏற்படும் மன அழுத்தத்துக்கு ஆளாகிறார்கள். "சாதாரண பிரச்சினையைக்கூட மிகப் பெரிய பிரச்சினையாக அவர்கள் கருதுகிறார்கள். இதனால், வெளியுலகின்மீதுகோபம்ஏற்படுகிறதுஅல்லதுதன்மேல்கோபமோ, இயலாமையோ ஏற்படுகிறது.

இது வன்முறையாகவோ,தற்கொலையாகவோ மாறுகிறது" என்கிறார் டாக்டர் சிவபாலன். பதின்பருவத்தினர் விபரீதமான முடிவுகளை எடுப்பது என்பது நமது காலத்தின் மிகப் பெரிய பிரச்சினை. பதின் பருவம்தான் மிகவும் சவாலான ஒரு பருவம். இந்தப் பருவத்தில் குழந்தைகள் மிகப் பெரிய மாற்றத்தைச் சந்திக்கிறார்கள். பெரும்பாலான பெற்றோருக்கு இதைப் பற்றி பெரிய புரிதல்கள் இருப்பதில்லை. ஆகவே, பள்ளிக்கூடங்களில்தான் இதற்கான விடையை அவர்கள் தேட வேண்டும். ஆனால், நம்முடைய கல்விக்கூடங்கள் அதற்கு ஏற்றவையாக இல்லை" என கூறுகிறார் அவர்.

1990–களுக்குப் பிறகு, தனியார் கல்வி நிறுவனங்கள் அதிகரித்த நிலையில் மாணவர்களின் நெருக்கடி வெகுவாக அதிகரித்திருக்கிறது. கல்வி நிறுவனங்களுக்கு இடையில் நடக்கும் போட்டியில் அதிகமான சுமையை மாணவர்கள் தலையில் சுமத்த ஆரம்பித்தார்கள். இந்த காலகட்டத்துக்குப் பிறகுதான் மாணவர்களிடம் பதற்றம், மன அழுத்தம் ஆகியவை அதிகரித்திருக்கின்றன. இந்த அழுத்தத்திலிருந்து விடுபட தற்கொலையை நாடுவது, , வன்முறையை நாடுவது ஆகியவை ஒரு தீர்வாக அவர்கள் மனதில் படுகின்றன. இந்த விவகாரத்தில் தீர்வைத் தேடும்போது இதனையும் மனதில்கொள்ள வேண்டும்" என்கிறார் சுனில்குமார்.

இந்தியா முழுவதுமே மாணவர்களின் தற்கொலைகள் அதிகரித்துவரும் நிலையில், இதற்கான தீர்வை ஆலோசிக்கும் வகையில், இந்திய உச்சநீதிமன்றம் கடந்த மார்ச் மாதம் நேஷனல் டாஸ்க் போர்ஸ் ஒன்றை அமைத்திருக்கிறது. இரண்டு முறை கூடி விவாதித்திருக்கும் இந்த நேஷனல் டாஸ்க் போர்ஸ், மூன்று குழுக்களை அமைத்திருக்கிறது. மனநலம் சார்ந்த பிரச்சினைகளை மருந்துகள் மற்றும் சிகிச்சை மூலம் எளிதில் குணப்படுத்தலாம். இதற்கான உதவி எண்களில் தொடர்பு கொண்டு நிவாரணம் பெறலாம். சினேகா தற்கொலை தடுப்பு உதவி மையம் 044–24640050 (24 மணி நேரம்) மாநில தற்கொலை தடுப்பு உதவி மையம் 104 (24 மணி நேரம்) சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் ஹெல்ப்லைன் – 1800 5990019.

நாகர்கோவில்

புனித அல்போன்ஸ் ஆலய திருவிழா!

கொடியேற்றத்துடன் துவங்கியது!!

ALPHONSA SHRINE CHURCH

நாகர்கோவில் ஜூலை 26,
கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் ஏ ஆர் கேம்ப் சாலையில் அமைந்துள்ள புகழ்பெற்ற புனித அல்போன்ஸ் ஆலய திருக்கொடியேற்றம் மற்றும்திருவிழாமுத்துக்குடை பவனியுடன் நடைபெற்றது.

இது கன்னியாகுமரி மற்றும் கேரளாவில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர் நாகர்கோவிலில் உள்ள அல்போன்சா ஆலய திருவிழா ஆண்டு தோறும் ஜூலை மாதம் பத்து நாட்கள் கொண்டாடப்படுவது வழக்கம்.

அதன்படி இந்த ஆண்டு திருவிழா நேற்று தக்கலை மறை மாவட்ட குருகுல முதல்வர் தோமஸ் பௌவத்துப்பறம்பில் தலைமையில் திருவிழா திருக் கொடியேற்றம் நடைபெற்றது. அப்போது முத்துக்குடை ஏந்தி வரவேற்பு அழிக்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் கேரளாவில் இருந்தும் ஏராளமான கிறிஸ்தவர்கள் ஆடம்பர கூட்டுதிருப்பலியில்கலந்து கொண்டனர். பத்து நாட்கள் வெகு சிறப்பாக நடைபெறும் இந்த திருவிழாவில் திருப்பலி , புனித அல்போன்சா சிறப்பு திருநாள் தினசரி மாலை ஆடம்பர கூட்டு திருப்பலி, நற்கருனை போன்ற ஆராதனை என பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது. வரும் 25.07.2025 03.08 .2025 ஆம் தேதி திருத்தேர் பவனி நடைபெறுகிறது.